






# யூஹுவா தொடக்கப்பள்ளி
# ஆறாம் வகுப்பு மாணவர்களின் பெற்றோர்களுக்கான பகிர்வ
# தமிழ்மொழி

# தமிழ்மொழி கற்றலின் நோக்கம்

❖ தமிழ் மொழியில் தன்னம்பிக்கையாகவும் சரளமாகவும் பேச வேண்டும்.


❖ பொருளைப் புரிந்துகொண்டு வாசிக்க வேண்டும்.

❖ தமிழர்களது பண்பாட்டையும் கலாசாரத்தையும் போற்ற வேண்டும்.

❖ வருங்காலச் சந்ததியினரிடம் தமிழ்மொழி வாழும் மொழியாக நிலைக்க வேண்டும்.

❖ தமிழர் என்னும் அடையாளத்தைத் தக்க வைத்துக் கொள்ளவேண்டும்.

# கற்றலும் கற்பித்தலும்



# தேர்வு விவரங்கள்

# தமிழ்

- ❖ கட்டுரை (20%)
- ❖ மொழித்தாள் (45%)
- ❖ கேட்டல் கருத்தறிதல் (10%)
- ❖ வாய்மொழித் தேர்வு (25%)

# தேர்வு விவரங்கள்
# உயர்தமிழ்

- கட்டுரை (40%)
- மொழித்தாள் (60%)

# தேர்வு விவரங்கள்
# அடிப்படைத்தமிழ்

- கேட்டல் கருத்தறிதல் (30%)
- மொழித்தாள் (15%)
- வாய்மொழித் தேர்வு (55%)

# சிறந்த கட்டுரை எழுத...


- படத்தைப் புரிந்துகொண்டு, கட்டுரையை எழுத வேண்டும். (100 சொற்கள்)
- 50 நிமிடங்களுக்குள் எழுதி முடிக்க வேண்டும்.
- இனிய தொடர்கள் பயன்படுத்த வேண்டும். (3-5)
- கட்டுரையின் கருத்துகள் தொடர்ச்சியாக அமைய வேண்டும்.
- கட்டுரையைப் பத்தி பிரித்து எழுதவேண்டும்.
- நிறுத்தற்குறிகளில் கவனம் செலுத்த வேண்டும்.
- நடைமுறைக்கேற்ற கருத்துகளை எழுத வேண்டும்.
- பழமொழி, திருக்குறள்களைப் பொருத்தமான இடங்களில் பயன்படுத்தலாம்.
- இணைப்புச் சொற்களைப் பிழையின்றி எழுதவேண்டும்.

# தாள் 2 (90%)

- மூவிடப் பெயரும் வினையும்
- செய்யுள் / பழமொழி
- அடைமொழி / எச்சம்
- முன்னுணர்வுக் கருத்தறிதல்
- தெரிவுவிடைக் கருத்தறிதல்
- ஒலி வேறுபாடு
- கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்
- சுயவிடைக் கருத்தறிதல்

# வாய்மொழித் தேர்வு (வளங்கள்)









# வாய்மொழித் தேர்வு (உத்திகள்)

- 5W1H உத்தியைப் பயன்படுத்த வேண்டும்.
- வாசிப்பு மற்றும் ஒளிக்காட்சி
- ஒளிக்காட்சி தொடர்பாகக் கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டும்.
- எ.கா. சரியான செயலா? தவறான செயலா? ஏன்? என்பதைக் கூற வேண்டும்.
- சொந்தக் கருத்துகளைக் கூற வேண்டும்.
- நிகழ் காலத்தில் விவரிக்க வேண்டும்.

# மாணவர்களின் கற்றலில் தகவல் தொழில்நுட்பத்தின் பங்கு




SLS என்னும் இக்கற்றல் தளம் மாணவர்களுக்கு மிகவும் பயன்மிக்கதாக அமையும்.

மாணவர் கற்றல் தளம்
https://vle.learning.moe.edu.sg/login

# நிகழ்ச்சிகள்

## தாய்மொழி வாரம்

தமிழ்மொழியின் தொன்மையும் அதன் கலாசாரத்தின் பழமையும் முக்கியத்துவமும் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்படும்.

## போட்டிகள்

வகுப்பிலும் வெளியே நடைபெறும் போட்டிகளிலும் பங்குபெற்றுத் தங்கள் தமிழ்மொழி புலமையை அதிகரித்துக்கொள்ள மாணவர்கள் அனுப்பப்படுவார்கள்.

# பள்ளியில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்

- வாசிப்பு நடவடிக்கைகள்
- பிற வளங்கள்
  - ❖ தமிழ் முரசு (செயலி)
  - ❖ சுட்டி மயில் சஞ்சிகை (வகுப்பில்)
- புத்தகப்புழுக் கையேடு
  - ❖ கதைப்புத்தகக் கருத்துதிர்ப்பு

# ஆர்வமூட்டும் கற்பித்தல் உத்திமுறைகள்

**P**
Place &
People
இடமும்
மனிதர்களும்

**E**
Emotion&
Environment
முகபாவனையும்
சூழலும்

**A**
Activity &
Action
நடவடிக்கையும்
செயலும்


**R**
Reason &
Reaction
காரணமும்
விளைவும்

**S**
Suggestion &
Solution
ஆலோசனையும்
தீர்வும்

**PEARS**
**உத்திமுறை**

# ஆர்வமூட்டும் கற்பித்தல் உத்திமுறைகள்



# யூஹூவா மாணவர்கள் ஒவ்வொருவராலும் முடியும்

மாணவர்களிடம் நாம் எதிர்பார்க்கும் விரும்பத்தக்க விளைவுகள்

நமது விரும்பத்தக்க நடத்தை குறியீடுகள், இயல்புகள் மற்றும் பண்புகள்

| A | C | H | I | E | V | E |
|---|---|---|---|---|---|---|
| துடிப்புடன் பங்களிப்பவர் | நுண்ணாய்வுச் சிந்தனையாளர் | ஆரோக்கியமானவர் | சுயமாகக் கற்பவர் | ஊக்கமளிக்கும் நண்பர் | விழுமியம்சார் தலைவர் | ஊக்கமளிக்கும் ஒத்துழைப்பாளர் |
| நான் என் சுற்றுப்புறத்தைப் பாதுகாக்கிறேன். | நான் அனைத்தையும் மீள்நோக்கி மேம்படுகிறேன். | நான் என் தன்னம்பிக்கையை வளர்க்கிறேன். | நான் எனது கற்றலுக்குப் பொறுப்பேற்கிறேன். | நான் மற்றவர்களோடு இணைந்து செயற்படுகிறேன். | நான் பொறுப்புடன் வழிநடத்துகிறேன். | நான் பிறரின் கருத்துகளுக்கு மதிப்பளிக்கிறேன். |
| நான் துடிப்புடன் பிறருக்கு உதவுகிறேன். | நான் கற்றுக்கொண்ட சிந்தனை வழமைகளைப் பயன்படுத்துகிறேன். | நான் பொறுப்பான முடிவுகளை எடுக்கிறேன். | நான் எனது கற்றல் இலக்குகளில் விடாமுயற்சியுடன் செயல்படுகிறேன். | நான் ஒரு சக ஆதரவாளர். | நான் என் செயல்களில் முன்மாதிரியாக இருக்கிறேன். | நான் மற்றவர்களுடன் நல்லிணக்கத்துடன் இணைந்து செயற்படுகிறேன். |
| நான் என் திறன்களைக்கொண்டு மற்றவர்களுக்கு நன்மை செய்கிறேன். | நான் ஒவ்வொன்றையும் வெவ்வேறு கண்ணோட்டத்தில் காண்கிறேன். | நான் என் மீது அக்கறை கொள்கிறேன். | நான் எனது கற்றலை ஆர்வத்தோடும் திறமையோடும் தொடர்கிறேன். | நான் எதையும் கவனத்துடன் கேட்கிறேன். | நான் பிரச்சினைகளுக்கு வெவ்வேறு வழிகளில் தீர்வு காண்கிறேன். | நான் என் எண்ணங்களைத் தன்னம்பிக்கையுடன் பகிர்ந்து கொள்கிறேன். |

## யூஹூவா மாணவர்கள் ஒவ்வொருவராலும் வெற்றி பெற முடியும்!

எங்களது ACHIEVE என்னும் மாணவர் பணிச்சட்டமானது, பள்ளியின் திட்டங்களுக்கும், வாழ்நாள் முழுவதும் கற்றல் நடைமுறைகளைச் செயல்படுத்துவதற்கும் அடிப்படையாக அமைந்துள்ளது. இதனைக் குறிக்கோளாகக்கொண்டே யூஹூவா தொடக்கப்பள்ளி, மாணவர்களின் இதயங்களையும் மனத்தையும் மேம்படுத்துவதற்கு விழைகிறது.

## நம் பள்ளியின் நோக்கமும், பகிரப்பட்ட நம்பிக்கைகளும்

யூஹூவா மாணவர் ஒவ்வொருவரும் தனித்தன்மையானவர்கள் என்றும் அவர்களால் நன்கு கற்று வாழ்க்கையில் வெற்றி பெற முடியும் என்றும் யூஹூவா தொடக்கப்பள்ளி திடமாக நம்புகின்றது. யூஹூவா பள்ளியின் உறுப்பினராகிய நாங்கள் ஒவ்வொருவரும் வாழ்நாள் கற்றலை முன்மாதிரியாகக்கொண்டு திறன்மிக்கவர்களாக வெளிப்பட முயல்கிறோம். அதே வேளை, எங்கள் யூஹூவா மாணவர்களின் கற்றல் மற்றும் கற்பித்தல் மேம்படுவதற்கு ஏதுவான அக்கறை மிகுந்த வகுப்பறைச் சூழலையும் உருவாக்கித் தருகிறோம்.

## பள்ளியின் விழுமியங்கள்: R3ICH

★ பொறுப்பு ★ மதிப்பு ★ மீளுந்தன்மை ★ நேர்மை ★ பரிவு ★ நல்லிணக்கம்

## பள்ளியின் முழக்கவரி

முயல்வோம் ஒளிர்வோம் - ஒன்றிணைந்து வெற்றி பெறுவோம்




Yuhua Primary School

# பெற்றோர்களின் பங்கு

- அன்றாட வாழ்க்கையில் காணும் நிகழ்ச்சிகளை உற்று நோக்க வேண்டும்.
- தகவல் தொழில்நுட்பத்தைக் கற்றலுக்குப் பயன்படுத்த வேண்டும்.
- தரமான ஒளிக்காட்சிகளை உங்கள் பிள்ளைகளிடம் காண்பிக்கலாம். பிறகு, அவற்றைப் பற்றிய அவர்களது கருத்துகளைக் கேட்டு, அவர்களுக்குச் சில யோசனைகளை வழங்கலாம்.

# பெற்றோர்களின் பங்கு

- பிள்ளைகளுடன் முடிந்தவரை தமிழில் உரையாடுங்கள்
- அன்றாட நிகழ்வுகளை எளிய முறையில் பிள்ளைகளைப் பேச ஊக்குவிக்கலாம். (வினைச்சொற்கள்)
- பிள்ளைகளுடன் சேர்ந்து தமிழ் கதைப்புத்தகங்களை வாசியுங்கள்
- வீட்டில் படிப்பதற்கு ஏதுவான சூழலை உருவாக்கிக் கொடுங்கள்
- உங்கள் பிள்ளைகளைத் தினமும் 5 நிமிடங்களுக்கு ஏதேனும் ஒரு பகுதியை வாசிக்கத் தூண்டுங்கள்

# பெற்றோர்களின் பங்கு

- தினமும் அவர்களுடைய பாடங்களைப்பற்றிக் கேட்டு, வீட்டுப்பாடங்களைச் செய்ய ஊக்குவிக்கலாம்.
- தரமான தமிழ் நிகழ்ச்சிகளை உங்கள் பிள்ளைகளுடன் சேர்ந்து பார்க்கலாம். அவற்றைப் பற்றி உடனுக்குடன் அவர்களுடன் தமிழில் உரையாடலாம்.
- “உன்னால் முடியும்!” என்று அடிக்கடி சொல்லி, அவர்களை ஊக்குவியுங்கள்.
- சிறு முன்னேற்றத்தையும் பாராட்டுங்கள்.
- பிள்ளைகள் கட்டொழுங்குடன் இருப்பதை உறுதி செய்துகொள்ளுங்கள்.

# மாணவரின் கற்றல் மேம்பாட்டை அறிய .....

சொல்வதெழுதுதல் பயிற்சிகள்

தொகுதிப் பயிற்சித்தாள்கள்

மாணவர் கற்றல் தளத்தில் பயிற்சிகள்

பயிற்சிநூல்

கோப்பு

# கேள்வி - பதில் அங்கம்

# கருத்துத் தெரிவிப்பு (To include QR Code)

# நன்றி!

